மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு நாகர்கோவிலிலே இல்லையென்று சொன்னார்கள். கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவைப் பொறுத்தவரையில், துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்து அது தேவைப்படுமாயின் அதற்கு ஏற்பாடு செய்வதற்குண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, கால்நடை உதவியாளர் பணியிடங்கள் அதிக அளவிலே அங்கே காலியாக இருக்கின்றதென்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, கால்நடை மருத்துவர்கள் அங்கே குறைவாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து தமிழகம் முழுவதற்குமான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இன்னொரு கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருந்தார். அதையெல்லாம் துறை அதிகாரிகளோடு கலந்து ஆய்வு செய்து, தேவைப்படுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

248—

வட்டாட்சியர் அலுவலகத்துடன் இணைத்தல்

***10447—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூன் 29]

(அ) பல்லாவரம் தொகுதி, மீனம்பாக்கம், பொழிச்சலூர் மற்றும் திரிசூலம் பகுதிகளை பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், பொழிச்சலூர் கிராமம் ஏற்கெனவே பல்லாவரம் வட்டாட்சியரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளது. அதைப்போல, மீனம்பாக்கம் கிராமம் தற்போது அரசாணை எண் 1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 4-1-2018-ன்படி, ஜூலை 2018 மாத இறுதியிலே சென்னை மாவட்ட விரிவாக்கத்தைப் பொறுத்து சென்னை மாவட்டத்துடன் இணைகிறது. மேற்குறிப்பிட்ட அரசாணையின்படி, ஜூலை 2018 மாத இறுதிக்குள் சென்னை மாவட்டத்தை விரிவாக்கம் செய்கின்ற பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அப்போது திரிசூலம் கிராமம், பல்லாவரம் வட்டத்துடன் இணையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீனம்பாக்கம் கிராமம், திரிசூலம் ஊராட்சி ஏற்கெனவே சென்னை, ஆலந்தூரிலே சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தனி வட்டமாக இருக்கிற காரணத்தினால், அதில் சேர்க்க வேண்டுமென்று நான் தெரிவித்தேன். ஆனால், ஏற்கெனவே பொழிச்சலூரில் அது சேர்க்கப்பட்டுவிட்டது. ஆக, இந்த ஊராட்சியிலுள்ள கிராமங்களையும் சேர்க்க மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

காரணம், திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள குன்றத்தூரிலுள்ள இரண்டு பேரூராட்சிகள் மற்றும் 14 ஊராட்சிகள் எல்லாம் இப்போது பல்லாவரத்தில் சேர்க்கப்பட்டதனால் மிக

அதிகமாக மக்கள் வருகை தருவதால் பணிகள் நடைபெறவில்லை. இப்போது 3 நகர கிராம நிருவாகத்திற்கு ஒரு கிராம நிருவாக அதிகாரி தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஒரு கிராம நிருவாகத்திற்கு ஒருவர் பணியாற்ற முடியவில்லை. காரணம், இந்த அரசு இதுவரை கிராம நிருவாக அதிகாரிகளைப் பணியமர்த்தாத காரணத்தினால் பல்லாவரம் நகராட்சியிலுள்ள ஒரு கிராம நிருவாக அதிகாரி அனகாபுத்தூர் நகராட்சிக்குச் சென்று பணியாற்றுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வட்டங்கள் உருவாக்குகிறபோது அந்த ஊராட்சிகளை இணைத்ததைப் பற்றியும், அதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்திலே, பொழிச்சலூர் கிராமம் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, பல்லாவரத்திலே இருக்கிறது. அதைத் தொடர்ந்து தற்போது சென்னை பெருநகர மாநகராட்சி, அதற்கு 3 வருவாய் மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்—ஏனென்றால் 200 வட்டங்கள் சென்னை பெருநகர மாநகராட்சியிலே இருக்கின்றன. ஆகவே, இந்த 200 வட்டங்களைக் கொண்டிருக்கிற சென்னை பெருநகர மாநகராட்சிக்கு இணையாக வருவாய் மாவட்டங்களையும் நாம் விரிவுபடுத்துகிற அரசாணை எண் 1, நம்முடைய துறையின் சார்பாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான், வட சென்னை, மத்திய சென்னை மற்றும் தென் சென்னை என்று உருவாக்கப்பட்டு, அதற்குரிய ஆய்வுகள் எல்லாம் தற்போது நடைபெற்று வருகின்றன. அரசாணை எண் 1-ன் அடிப்படையிலே, இந்த 200 வட்டங்கள் 15 மண்டலங்களைக் கொண்டிருக்கிற சென்னை பெருநகர மாநகராட்சிக்கு இணையாக, வருவாய் மாவட்டங்கள்—ஏனென்றால் மாநகராட்சிக்குச் சென்னைக்கு

2018 ஜூன் 29]

வர வேண்டும், வருவாய் மாவட்டத்தைப் பார்த்தீர்களென்றால், காஞ்சிபுரத்தில் இருக்கிறவர்கள், சென்னையிலே இருக்கிறவர்கள், இப்படி மாறி மாறிப் போக வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, ஒரே மாதிரி ஆட்சி எல்லைகள் மாநகராட்சிக்கும், வருவாய் மாவட்டத்திற்கும் உருவாக்க வேண்டுமென்ற அந்த அரசாணை வெளியிட பட வேண்டும். நம்முடைய ஆலந்தூர் வட்டத்திலே 10 ஊராட்சிகள் இருக்கின்றன. பெயரும் என்னிடம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருக்கு அதைத் தனியாக நான் கொடுக்கிறேன். அதேபோல, பல்லாவரம் வட்டத்திலே தற்போது 15-லிருந்து 27 ஊராட்சிகள் இருக்கின்றன. நாம் சென்னையை விரிவாக்கம் செய்கிறபோது, ஆட்சி எல்லைகள் அமைக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலனை செய்து, அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பம்மல், அனகாபுத்தூர் நகராட்சிகளிலெல்லாம் கிராம நத்தப் பட்டாக்கள் வழங்க நில அளவை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். தற்போது, சுமார் 1,000 கிராம நத்தப் பட்டாக்கள் வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றன. ஆனால், இன்னும் பம்மலில் 6,000 கிராம நத்தப் பட்டாக்களும், அனகாபுத்தூரில் 4,500 பட்டாக்களும் வழங்கப்பட வேண்டும். அதற்கான பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி 2010-2011-ல் நடைபெற்றபோது, முடிச்சூரில் கிராம நத்தத்திற்கென்று ஒரு தனி வட்டாட்சியரை நியமனம் செய்து, அதன் மூலமாக திருநீர்மலை பேரூராட்சிக்கும், அதேபோன்று பொழிச்சலூர் ஊராட்சிக்கும் ஆயிரக்கணக்கான பட்டாக்கள் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டன. ஆனால், இப்போது, அந்தப் பகுதிகளிலும் பட்டாக்கள் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன. ஆகவே, விடுபட்டவர்களுக்கு மனைப் பட்டாக்களும், அதேபோன்று பம்மல், அனகாபுத்தூரில் சுமார் 10,000 பேர்களுக்கு கிராம நத்தப் பட்டாக்களையும் விரைந்து,*

மூன்று மாத காலத்திற்குள் இந்த அரசு வழங்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆட்சி எல்லையிலிருந்து மாறி, இப்போது வழங்கப்பட வேண்டிய பட்டாக்களைப் பற்றி கேட்டிருக்கிறார். இப்போது, உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அதை, நாங்கள் மறுக்கவில்லை. அது, கிராம நத்தத்திற்கான தாசில்தார் நியமனம் அல்ல. அது* Settlement Tahsildar *குறித்த நியமனம் அதாவது கிராம நத்தத்திற்குரிய* Settlement Tahsildar. *அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள்கூடச் சொல்லியிருந்தார்கள். இப்போதும், நகராட்சிகள், ஊராட்சி பகுதிகளைத் தாண்டி* Settlement Tahsildar *மூலமாக கிராம நத்தத்திற்கான பட்டாக்களைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். பட்டாக்கள் வழங்குவதைப் பொறுத்தவரையில் நாம் மூன்று வகையான திட்டங்களை வைத்திருக்கிறோம். இதை நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பதிவு செய்திருக்கிறேன். அதாவது,* regular scheme, regularisation *மற்றும் நத்தம்* settlement. *இந்த வகையில்தான் நாம் பட்டா வழங்குகிறோம். நத்தம்* settlement *என்னவென்றால், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா சொன்னதைப்போல, அந்த இடங்களை அவரவர்கள் கைவசம் வைத்திருப்பார்கள். அவற்றையெல்லாம் நாம் அளவு எடுத்து, அதை வருவாய்த் துறை ஆவணங்கள் வழியாக கொடுப்பதுதான் நத்தம்* settlement. *அந்த அடிப்படையில் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன; திருத்தணி மற்றும் எல்லா இடங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உறுப்பினர் சார்ந்திருக்கிற கட்சியின் ஆட்சிக் காலத்தில் கொடுத்ததைவிட, ஒருபடி மேலே கொடுப்பதற்கு* (மேசையைத் தட்டும் ஒலி) *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. மீண்டும் நான் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு முன் வைக்கிறேன்; 20 இலட்சம் பட்டாக்களை வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு இதய*

2018 ஜூன் 29]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

249—

அதிநவீன சொகுசுப் பேருந்து

***33948—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர்-சென்னை வழித்தடத்தில் அதிநவீன சொகுசுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 427 Ultra Deluxe, *சென்னை-மேட்டூருக்கு இயக்கப்பட்ட நிலையில் பயணிகளின் அடர்வு குறைவு மற்றும் வருவாய் இழப்பு ஏற்பட்டதால் மேற்படி தடத்தில் 2008 ஆம் ஆண்டு பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது. இருப்பினும், தற்போது சென்னை-மேட்டூர் தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் மூலமாக தொடர்ந்து பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால், மேட்டூர்-சென்னை வழித்தடத்தில்* Ultra Deluxe *சொகுசுப் பேருந்தை மீண்டும் இயக்க வேண்டிய சூழல் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளின் எண்ணிக்கை குறைவு என்று சொல்வதை*